# Gramin Krishi Mausam Sewa
# (கிராமின் கிருஷி மௌஸம் சேவா)

Experimental Block Level Agromet Advisory Bulletin
(A Joint Initiative of IMD & Amrita School of Agricultural Sciences )

## • Customized Agromet Advisory Bulletin •
## (தனிப்பயனாக்கப்பட்ட வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கைத் தாள்)

**Weather Forecast of KINATHUKADAVU Block**
**(கிணத்துக்கடவு தொகுதி வானிலை முன்னறிவிப்பு)**

**BLOCK LEVEL**

**Agro Meteorological Advisory Bulletin for the state of Tamil Nadu Bulletin No. 83/2024**
**For the period 0830 IST, 28th March 2024 to 0830 IST, 1st April 2024**
**Issued on Thursday, 28th March 2024**

Issued by

**India Meteorological Department**
**and**
**Amrita School of Agricultural Sciences,**
**Amrita Vishwa Vidyapeetham, Arasampalyam, Coimbatore Campus.**

# Gramin Krishi Mausam Sewa

## (கிராமின் கிருஷி மௌஸம் சேவா)

Experimental Block Level Agromet Advisory Bulletin
(A Joint Initiative of IMD & Amrita School of Agricultural Sciences )

# • Customized Agromet Advisory Bulletin •

## (தனிப்பயனாக்கப்பட்ட வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கைத் தாள்)

Date : 28-03-2024

### Past recorded weather summary data for the period 23.03.2024 to 27.03.2024 for the block KINATHUKADAVU

(கிணத்துக்கடவு தொகுதிக்கான கடந்த 23.03.2024 முதல் 27.03.2024 வரையிலான காலநிலையில் பதிவு செய்யப்பட்ட வானிலை சுருக்கம்)

| Parameter / அளவுரு | 23.03.2024 | 24.03.2024 | 25.03.2024 | 26.03.2024 | 27.03.2024 |
|---|---|---|---|---|---|
| Rainfall (mm)<br>மழைப்பொழிவு (மிமீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| Tmax (°C)<br>அதிகப்படியான வெப்பநிலை (°C) | 38 | 36 | 36 | 36 | 39 |
| Tmin (°C)<br>குறைந்த அளவு வெப்பநிலை (°C) | 27 | 27 | 27 | 28 | 27 |
| RH-I (%)<br>காலை நேர காற்றின் ஈரப்பதம் (%) | 97 | 96 | 92 | 97 | 92 |
| RH-II (%)<br>மாலை நேர காற்றின் ஈரப்பதம் (%) | 78 | 71 | 68 | 71 | 68 |
| Evaporation (mm)<br>ஆவியாதல் (மி.மீ.) | 6.4 | 6.4 | 7 | 7.2 | 7.8 |
| Wind Speed (kmph)<br>காற்றின் வேகம் ( கி.மீ.) | 5.36 | 4.15 | 5.10 | 4.10 | 5.10 |

### Weather Forecast of KINATHUKADAVU Block in COIMBATORE (Tamil Nadu)
### Issued on: 28.03.2024 (Valid Till 08:30 IST of the next five days)

தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர், கிணத்துக்கடவு தொகுதியின் வானிலை முன்னறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் 28.03.2024 (அடுத்த ஐந்து நாட்களில் 8.30 IST வரை செல்லுபடியாகும்)

| Parameter / அளவுரு | 28.03.2024 | 29.03.2024 | 30.03.2024 | 31.03.2024 | 01.04.2024 |
|---|---|---|---|---|---|
| Rainfall (mm)<br>மழைப்பொழிவு (மிமீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| Tmax (°C)<br>அதிகப்படியான வெப்பநிலை (°C) | 33.7 | 35.4 | 35.3 | 35.4 | 35.6 |
| Tmin (°C)<br>குறைந்த அளவு வெப்பநிலை (°C) | 22.4 | 21.7 | 22.1 | 22.0 | 22.4 |

| Parameter / அளவுரு | 28.03.2024 | 29.03.2024 | 30.03.2024 | 31.03.2024 | 01.04.2024 |
|---|---|---|---|---|---|
| **RH-I (%)**<br>காலை நேர காற்றின் ஈரப்பதம் (%) | 71 | 82 | 74 | 86 | 83 |
| **RH-II (%)**<br>மாலை நேர காற்றின் ஈரப்பதம் (%) | 18 | 16 | 19 | 16 | 19 |
| **Wind Speed (kmph)**<br>காற்றின் வேகம் (கி.மீ) | 11 | 15 | 12 | 15 | 13 |
| **Wind Direction (Degree)**<br>காற்று இயக்கம் (பட்டம்) | 68 | 248 | 248 | 248 | 245 |
| **Cloud Cover (Octa)**<br>மேகக்கணி (ஆக்டா) | 4 | 4 | 3 | 4 | 4 |

## Weather Summary/Alert ( வானிலை சுருக்கம் / எச்சரிக்கை )

According to the IMD's block level forecast for the Kinathukadavu block in the Coimbatore district, sky will be very clear. No rainfall is expected during this period. Maximum temperature ranges from 33.7°C to 35.6°C and minimum temperature ranges from 21.7°C to 22.4°C. Relative humidity ranges from 71 to 86 % in the morning and from 16 to 19 % in the evening. It is predicted that the wind will be blow from the North East direction at a velocity of 11 to 15 km per hour.

வரும் நாட்களில், வானம் ஆங்காங்கே மேகங்கள் காணப்படலாம். இந்த காலகட்டத்தில் மழைப்பொழிவு எதுவும் இருக்காது. அதிகபட்ச வெப்பநிலை 33.7°C முதல் 35.6°C வரையிலும், குறைந்தபட்ச வெப்பநிலை 21.7°C முதல் 22.4°C வரையில் இருக்கும். காலை நேர ஈரப்பதம் சுமார் 71 முதல் 86% வரையிலும் மாலை நேர ஈரப்பதம் 16 முதல் 19% வரையிலும் பதிவாகும். காற்றின் வேகம் மணிக்கு 11 முதல் 15 கி.மீ. வேகத்தில் வீசும் மற்றும் காற்றின் திசையானது வடகிழக்கு திசையிலிருந்து வீசும்.

## General Advisory ( பொது ஆலோசனை )

For next five days, no rainfall is expected in this block. Dry days are expected during this period.

இந்த காலகட்டத்தில் மழைப்பொழிவு எதுவும் இருக்காது. அத்துடன் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

## Coconut Crop Specific Advisory

1. To reduce the button shedding in coconut under this weather condition, feed the roots with coconut tonic of 200 ml per palm.
2. To conserve soil moisture use mulching materials like coconut husks, leaves, palms and coir pith.
3. Apply 25 kg of Coir pith in the basin of 1.8 m radius around the palms

## தென்னை பயிர் சார்ந்த அலோசனைகள்

1. இந்த தட்பவெப்ப நிலையில் குரும்பை உதிர்தலைத் தடுக்க ஒரு மரத்திற்கு 200 மி.லி. தேங்காய் டானிக்கை வேர்களுக்கு அளிக்க வேண்டும்.
2. மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாப்பதற்கு தென்னை மட்டை, ஓலைகள், நார்கழிவுகள் போன்றவற்றை பயன்படுத்தி மூடாக்கு அமைக்கலாம்.
3. தென்னை மரத்தை சுற்றி 1.8 மீட்டர் என்ற சுற்றளவில் 25 கிலோ தென்னை நார்க்கழிவுகளை இட வேண்டும்.




**Coconut Tonic / தென்னை டானிக்**

## Integrated Pest Management for coconut pests ( ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை)

### 1. Red Palm Weevil

- Consistent observation of the farm should be done for earlier detection.
- Seal the injured site in trunk with cement to prevent oviposition of weevil.
- Isolate and burn the infested coconut palms away from the farm.
- Follow prophylactic treatment for rhinoceros beetle, leaf rot and bud rot disease, failing which can invite the red palm weevil incidence.
- To check the incidence of red palm weevil, Ferro lure can be fixed in plastic buckets @ 12 traps/ha.
- Swabbing Coal tar or stem injection with spinosad 0.013% can be done to treat the wounds on the palm.
- To trap adult red palm weevils, coconut log traps consisting of toddy 2½ litres, acetic acid 5 ml and yeast 5 g in longitudinally split tender coconut logs can be set up.

### 1. தென்னை சிவப்பு கூன் வண்டு ஒருங்கிணைந்த மேலாண் முறைகள்

- ஆரம்ப நிலை சிவப்பு கூன் வண்டு தாக்குதலை கண்டறிய தொடர்ச்சியாக கண்காணித்தல் அவசியம்.
- தென்னை காண்டாமிருக வண்டு, இலை அழுகல், மொட்டு அழுகல் ஆகியவற்றை தடுக்கும் மேலாண் முறைகளை சரியாக பின்பற்றுவதன் மூலம் சிவப்பு கூன் வண்டு தாக்குதலை வெகுவாக கட்டுப்படுத்தலாம்.
- மரத்தில் சேதம் அல்லது கீறல் ஏற்படுமாயின், அவை சிவப்பு கூன் வண்டு முட்டையிடுவதற்கு ஏதுவான இடமாக மாறி விடும். ஆதலால், அதனை சிமெண்ட் கொண்டு அடைத்து விட வேண்டும்.
- பாதிப்பிற்குள்ளாகி இறந்த தென்னை மரங்களைத் தோப்புகளிலிருந்து நீக்கி எரித்துவிடல் வேண்டும்.
- பெரொலூர் (Ferrolure) இனக்கவர்ச்சிப் பொறிகளை பிளாஸ்டிக் வாளிகளுள் பொருத்தி ஒரு எக்டருக்கு 12 என்ற வீதம் வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- மரத்தில் ஏற்படும் காயங்களை சீராக்க தார் தடவலாம் அல்லது ஸ்பினோஸாட் 0.013% னை தண்டுப்பகுதியில் ஊசி மூலம் ஏற்றலாம்.
- 2½ லிட்டர் தென்னங் கள், 5 மி.லி. அசிடிக் அமிலம் மற்றும் 5 கிராம் ஈஸ்ட் கலவையை நீளமாக வெட்டப்பட்ட தென்னை மரக்கட்டைகளுக்குள் வைத்து தென்னை மரக்கட்டை பொறி அமைத்து தோப்பில் ஆங்காங்கே வைப்பதன் மூலம் சிவப்பு கூன் வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.



Red Palm Weevil / தென்னை சிவப்பு கூன் வண்டு

### 2. Rhinoceros beetle

- Clear away and burn the dead coconut trees found in the orchard.
- Life stages of the rhinoceros beetle noticed in the manure pits can be collected and killed.
- Mechanical removal of adult beetles using Galvanized Iron hooks can be done.
- Rhino lure fixed in plastic buckets @ 12 traps/ha can be installed to check the incidence of rhinoceros beetle.
- Green muscardine fungus (Metarhizium anisopliae) available in the market can be sprayed in the manure pits to kill their life stages.
- 1 kg castor cake soaked in 5 litres of water in small mud pots can act as a bait to attract and kill the adults.
- 3 to 4 naphthalene balls can be placed at the base of top three coconut leaf sheath once in 45 days will combat the adult entry into the crown region of the seedlings.
- Manure pits and breeding sites can be sprayed with 0.01% carbaryl (50 WP) to kill their life stages.

### 2. தென்னை காண்டாமிருக வண்டு ஒருங்கிணைந்த மேலாண் முறைகள்

- பாதிப்பிற்குள்ளாகி இறந்த தென்னை மரங்களைத் தோப்புகளிலிருந்து நீக்கி எரித்துவிடல் வேண்டும்.
- உரக்குழிகளில் காணப்படும் காண்டாமிருக வண்டின் முட்டைகள், இளம் புழு, கூட்டுப்புழு பருவங்களை சேகரித்து கொன்று விடவேண்டும்.
- இரும்பு கம்பிகளைக் கொண்டு தென்னையின் நடுக்குருத்துப்பகுதியில் இருக்கும் காண்டாமிருக வண்டை எடுத்து அழிக்க வேண்டும்.
- ரைனோலூர் (**Rhinolure**) இனக்கவர்ச்சிப் பொறிகளை பிளாஸ்டிக் வாளிகளுள் பொருத்தி ஒரு ஹெக்டருக்கு 12 என்ற வீதம் வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- சந்தையில் எளிதில் கிடைக்கக்கூடிய, புழுக்களை தாக்கி அழிக்கும் பச்சை மஸ்கார்டைன் பூஞ்சாணத்தை (*மெட்டாரைசியம் அனிசோபிலியே*) எருக்குழிகளில் கலந்து விடவேண்டும்.
- மண்பானைகளில் ஒரு கிலோ ஆமணக்குப் புண்ணாக்கினை 5 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து, தோப்புகளில் வைப்பதன் மூலம் வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- தென்னங்கன்றுகளில் மேலிருந்து முதல் மூன்று மடல்களின் அடிப்பகுதியில் 45 நாட்களுக்கு ஒருமுறை, 3-4 அந்துப் பூச்சி உருண்டைகளை வைப்பதன் மூலம், வண்டுகள் நடுக்குறுத்து பகுதியில் தாக்குவதைத் தடுக்கலாம்.
- உரக்குழிகள் மற்றும் காண்டாமிருக வண்டுகளின் புழுக்கள் இருக்கும் இனப்பெருக்க குழிகளில் 0.01 சதவிகித கார்பரில் ( **50 WP** ) பூச்சிக்கொல்லியை தெளித்து அவற்றை அழிக்கலாம்.

### 3. Rugose spiralling whitefly

- Forced spraying of water using a rocker sprayer focusing on the underside of the leaves may disperse the rugose spiralling whiteflies population
- Natural enemies such as *Encarsia sp., Chrysoperla zastrowi Sillemi* and ladybird beetles naturally available in the coconut ecosystem may be conserved.
- Yellow polythene sheets smeared with castor oil or grease can be tied in between the palm trunks at the rate of 15 per acre.
- Whitefly pupae attacked by *Encarsia sp.* may be collected from trees infested with rugose spiralling whitefly and tied to a freshly affected tree.
- To check sooty mould growth, 2.5 % maida paste mixed with Khadi soap @ 5g/ litre may be sprayed on the affected leaves.

### 3. தென்னை ருகோஸ் வெள்ளை ஈ ஒருங்கிணைந்த மேலாண் முறைகள்

- தென்னை மட்டைகளின் அடிப்பகுதி ஓலைகளில் படுமாறு வேகமாக தண்ணீரை பீய்ச்சி அடிப்பதன் மூலம் ருகோஸ் வெள்ளை ஈக்களின் பெரும்பகுதி இலைகளிலிருந்து நீக்கப்படும்.
- மஞ்சள் பாலித்தீன் தாள்களில் விளக்கெண்ணெய் அல்லது கிரீஸ் தடவி தென்னை மரங்களுக்கு இடையே ஏக்கருக்கு 15 என்ற வீதத்தில் கட்ட வேண்டும்.

- இயற்கையாகவே தென்னந்தோப்புகளில், *என்கார்சியா* என்னும் ஒட்டுண்ணிகள் இப்பூச்சிகளை கட்டுக்குள் வைக்கும். இருப்பினும், இந்த ஒட்டுண்ணி குளவிகள் தாக்கப்பட்ட வெள்ளை ஈக்களின் கூட்டுப்புழுக்களை சேகரித்து புதிதாக வெள்ளை ஈக்கள் தாக்கப்பட்ட மரத்தின் ஓலைகளில் கட்டி விட வேண்டும்.
- இயற்கை எதிரிகளான பச்சை கண்ணாடி இறக்கைப் பூச்சி மற்றும் பொறிவண்டுகள் தோட்டத்தில் காணப்படுமாயின் அவற்றை பாதுகாத்து, ஊக்குவிக்க வேண்டும்.
- 2.5 சதவிகித மைதா கரைசலை 5 கி. காதி சோப்புடன் கலந்து தெளிப்பதன் மூலம் இலைகளின் மீது படரும் கரும்பூசணத்தை கட்டுப்படுத்தலாம்.



Rugose spiralling whitefly / தென்னை ருகோஸ் வெள்ளை ஈ

### 4. Eriophyid mite

- Remove mite-infected premature falling nuts from the orchard and burn them to reduce pest infestation.
- Root feeding can be provided with water and azadirachtin 10000 ppm at the rate of 1:1 ratio.
- Talc formulation of entomopathogenic fungi, *Hirsutella thompsonii* @ 20 g/lit of water can be sprayed to combat the mite infestation.
- Spot application of insecticides like Triazophos 40 EC @ 5ml/litre, or Carbosulfan 25 EC @ 2 ml/lit can be administered.

### 4. தென்னை ஈரியோ.:.பைட் சிலந்தி ஒருங்கிணைந்த மேலாண் முறைகள்

- முதிர்ச்சிக்கு முன்னர் கீழே விழும் குரும்பைகளை சேகரித்து தோப்பிலிருந்து அப்புறப்படுத்தி எரித்து அழிக்க வேண்டும்.
- அசாடிராக்டின் 10000 பிபிஎம் + தண்ணர் ஆகியவற்றை 1:1 என்ற விகிதத்தில் கலந்து வேர் வழி ஊட்டமாக அளிக்க வேண்டும்.
- தூள் வடிவில் விற்கப்படும் *ஹிர்சுட்டெல்லா தாம்சோனி* என்னும் பூஞ்சாணத்தை லிட்டருக்கு 20 கிராம் வீதம் நீரில் கலந்து தெளிப்பதால் சிலந்திகள் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.
- தென்னை வேரை சுற்றியுள்ள பகுதியில் டிரையஸோஃபாஸ் 40 EC, 50 மி.லி./லி. (அ) கார்போசல்ஃபான் 25 EC, 2 மி.லி./லி. ஆகிய பூச்சிக்கொல்லிகளை இடுவதன் மூலம் சிலந்தி பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

## Integrated Disease Management ( ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை)

### 1. Stem bleeding of coconut

- The completely affected tissues should be chiseled out and the trunk should be painted with bordeux paint
- Avoid mechanical injury to trunk
- Application of Trichoderma at 200g/palm/year along with 50kg FYM and 5kg neem cake to basin during September months
- Soil application of neem cake is beneficial
- Provide adequate drainage during rainy days
- Digging of coconut gardens during summer months to provide good drainage and air supply to roots

### 1. சாறு வடிதல் நோய்

- முற்றிலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை எடுத்துவிட்டு அதில் போர்ட்டாக்ஸ் பெயிண்டை பூசவும்.
- மரத்தின் தண்டுக்கு இயந்திர காயத்தைத் தவிர்க்கவும்.
- மரம் ஒன்றுக்கு, ஆண்டிற்கு 50 கி.கி. தொழுஉரத்துடன் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கினை 200 கிராம் எதிர் உயிர் பூஞ்சை *டிரைகோடெர்மா விரிடி* உடன் கலந்து குழிகளில் இட வேண்டும்.
- வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடுவது நன்மை பயக்கும்.
- மழை நாட்களில் முறையான வடிகால் வழங்க வேண்டும்.
- கோடை மாதங்களில் நல்ல வடிகால் மற்றும் வேர்களுக்கு காற்று வழங்குவதற்காக தென்னந்தோப்புகளைச் சுற்றி மண்ணைத் தோண்டுதல்.



Stem bleeding / சாறு வடிதல் நோய்

### 2. Leaf Rot Disease of Coconut Management aspects

- Removal of rotten portions of spear of coconut tree.
- Pouring of Mancozeb solution- 3g in 300 ml of water per palm at the base of spindle leaf is essential.
- Crown and leaves need to be sprayed with 1% Bordeaux mixture during January months.

### 2. தென்னையில் இலை அழுகல் நோய் கட்டுப்படுத்தும் முறை

- பூஞ்சைகொல்லி மான்கோசெப் – 3 கி. + 300 மில்லி தண்ணீர் கலந்து குருத்திலைகளின் அடியில் ஊற்ற வேண்டும்.
- அழுகிய குருத்து மற்றும் அருகிலுள்ள இரண்டு ஓலைகளையும் அகற்றி விட வேண்டும்.
- கொண்டை மற்றும் ஓலைகளுக்கு 1 சதவீதம் போர்டோ கலவை தெளிக்க வேண்டும்.



Coconut leaves sprayed with Bordeaux mixture for leaf rot / தென்னை இலையில் போர்டாக்ஸ் கலவை தெளிப்பு

### Livestock Advisory ( கால்நடைகளுக்கான ஆலோசனை )

- Provide plenty of cool water mixed with minerals for drinking, and shower the animals with cold water twice a day. Provide one lemon, 100g jaggery and 50g salt in drinking water to the animals during hot weather.
- வெயில் காலத்தில் கால்நடைகளுக்கு குடிநீரில் ஒரு எலுமிச்சை, 100 கிராம் வெல்லம் மற்றும் 50 கிராம் உப்பு ஆகியவற்றை சேர்த்து வழங்கலாம் அல்லது தாதுக்கள் கலந்த குளிர்ந்த நீரை வழங்கலாம். மேலும், கால்நடைகளை ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிர்ந்த நீரில் குளிக்க வைக்க வேண்டும்.

- Provide adequate ventilation in hot weather as birds cannot sweat. Position fans to optimise wind speed if possible. Reduce stocking densities or provide more floor space/bird.
- பறவைகளுக்கு வெப்பமான காலநிலையில் போதுமான காற்றோட்டத்தை வழங்க வேண்டும். முடிந்தால் காற்றின் வேகத்தை மேம்படுத்த மின்விசிறிகளை வைக்கவும். இருப்படர்த்தி குறைக்கவும் அல்லது ஒரு பறவைக்கு அதிக தளத்தை வழங்க வேண்டும்.